WBCL12-1-3-TA

# விட்டு விடுகிறேன்! - ஏன் உங்களால் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடிவதில்லை - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: நீங்கள் இதுவரைக்கும் எப்போதாவது சொல்லியிருக்கிறீர்களா, “என்னால முடியாது! என்னால கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது?

**டாக்டர் வேயின் பார்பர்:**

ஒருநாள் காலையில் நான் எழுந்ததும், ஜான், உங்ககிட்ட உண்மைய சொல்ல விரும்புகிறேன், அன்னைக்கு எனக்கு கிறிஸ்தவன் என்ற உணர்வே இல்லை. யாராக இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் இல்லாமல் இருந்தேன். அதாவது, அந்த உணர்வோடு தான் நான் கண்விழித்தேன். ஒரு பழங்காலத்து பையன் சொன்னது ஞாபகமிருக்குதா, “தேவனே, நா பேராசப்படல. எனக்கு இச்சையான சிந்தனைகள் இல்லை. னா பொய் சொன்னது கிடையாது, யாரையும் நா ஏமாத்துல, ஆனா இப்ப என்னோட படுக்கையில் இருந்து நா எழுந்திருக்க போகிறேன்.”

தேவன்  என்னிடம் செய்யும்படி சொன்ன காரியத்தை செய்ய எனக்கு திறமை இல்லை. இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால் வாழ

முடியாது. அப்ப எனக்குள் வாழ்கிறவர் என்னை பெலப்படுத்துகிறவராக இருக்கிறார், அவர் என்னிடம் இருந்து எதிர்பார்க்கிற காரியங்களை நான் செய்யும்படி எனக்கு சத்துவத்தை அளிக்கிறார்.

இப்ப, என்னில் புதிய சுபாவம் இருக்கிறது, நான் கிறிஸ்துவின் சுபாவத்திற்கு பங்குள்ளவனாக இருக்கிறேன். இருந்தாலும் நான் மாம்சத்தோடு போராடி மேற்கொள்ள வேண்டியிருக்கு இந்த யுத்தம் அனைத்தும் கிறிஸ்துவை நமது இருதயத்தில் நாம் ஏற்றுகொண்ட நிமிடத்தில் இருந்து துவங்குகிறது.

**அறிவிப்பாளர்:** இன்றைய எனது விருந்தினர் ஒரு கருத்தரங்கு பேச்சாளர், நூலாசிரியரும் போதகருமான Dr. வேயின் பார்பர், வுட்லாந்து பார்க் பாப்டிஸ்ட் திருச்சபையின் போதகராக இருக்கிறார் சாடாநோகா, டெநீசீ

**பார்பர்:**அவர் நமக்குள் வாசம்பண்ணி நம்மிடம் இருந்து நாம் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யும்படி சத்துவமளிக்கிறார். அதுதான் நற்செய்தியாக இருக்கிறது. அதுதான் சுவிசேஷத்தின் அழகு தன்மையாகவும் இருக்கிறது. அது இரட்சிப்போடு நின்று விடுவதில்லை. கிறிஸ்து நமக்குள் வந்து வாசம்பண்ண துவங்குகிறார். அவர்தான் நமது நித்திய ஜீவன். அவர்தான் நமது ஜீவன் அதைதான் ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்க எப்படி அவரை

ஏற்றுகொண்டீர்களோ அப்படியே அதில் நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவரை நம்பிடுங்கள்.

**அறிவிப்பாளர்:** ஜான் அன்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். உங்களுக்கு நான் ஏற்கனவே அறிமுகம் செய்தபடி சிறப்பான விருந்தினர் நம் மத்தியில் இருக்கிறார், இந்த நபரை எனக்கு ரொம்ப பிடிக்கும் என்பதை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அவர்தான் Dr. வேயின் பார்பர். உலகம் முழுவதும் இவரை வரும்படி வேண்டிக்கொண்டு இருக்கிறார்கள். அவர் சிங்கபூரிலிருந்து வந்தார், ஐரோப்பா சென்றிருக்கிறார் ஆஸ்திரேயிலியா சென்று வந்தார். நா சொல்லட்டுமா, உலகம் முழுவதும் நடக்கும் கருத்தரங்குகளுக்கு செஇன்று நம்மை போல பிரச்சனையோடு இருக்கிறவர்களுக்கு உதவி வருகிறார், அதுதான் மாம்சத்தோடு இருக்கும் போராட்டம் கிறிஸ்தவராக பாவத்திற்கு அடைமைபட்டிருக்கும் நிலை. கம் ஆன்., எங்கிட்ட சொல்லாதீங்க, நீங்க, என்ன பேசறீங்கன்னு உங்களுக்கே தெரியலன்னு சொல்லாதீங்க. உங்களுடைய வாழ்க்கையில் சில காரியங்கள் பிரச்சனை நிறைந்ததாக இருப்பது போல உங்களுக்கு தெரியும். அது தொடர்ந்து இருக்கும். அப்ப நீங்க, தேவனே, நா அப்படி

செய்தததற்காக என்னை மன்னியும் என்பீர்கள், மேலும், அதாவது, கொஞ்ச நாள்ல மறுபடியும் அதையே செய்வீங்க, இல்லை அன்னைக்கே கூட செய்வீங்க. அதை பற்றிதான் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். இங்க என்ன நடக்குது? ஏன், ஒரு உண்மையான கிறிஸ்தவராக இருந்தும், உங்களுக்கு ஏன் பிரச்சனைகள் வருகிறது?சிலருடைய கருத்து இதுதான், "எனக்குள்ள இன்னும் மறையாத பலவிதமான ஆசைகள் இருப்பதால நா இன்னும் முழுசா இரட்சிக்கப்படல போல இருக்குன்னு சொல்வாங்க. இன்றைக்கு நாம் அதை பற்றி தான் பார்த்துகொண்டு இருக்கிறோம். சரி, வேயின், துவங்கிடலாமா. உங்களுடைய சொந்த கிறிஸ்தவ வாழ்க்கையில் இந்த நெருடலை நீங்களும் சந்தித்திருக்கிறீர்கள். நிகழ்ச்சியின் துவக்கமாக அதிலிருந்து ஒரு உதாரணத்தை சொல்லுங்க.

**பார்பர்:** நாங்க மிசிசிபில இருந்தப்ப எங்க வீட்டுல டேபிளிள்ள உட்கார்ந்திருந்தேன், அப்ப ராய் ஹெசியன் கல்வாரி பாதை மற்றும் ஒன்பது கிறிஸ்தவ அடைப்பை காரியங்கள் போன்றவற்றை எழுதிய எனது குருத்துவர் என் வாழ்வில் முக்கியமானவர், என்னோடு கூட அன்றைக்கு உட்கார்ந்திருந்தார். அவர் இருந்த விதம் எனக்கு ரொம்ப பிடிக்கும். அவர் மேல புல்லா சாப்பாடு ஆயிடுச்சு, அவர் வாயில சாப்பாடு வைத்து கொண்டே பேசிடுவார். நா யோசித்தேன், அவரும் என்னை போல சாதாரணமான மனுஷன் தான், இருந்தாலும் தேவன் அவரை பயன்படுத்தினார். ஆனா நா கேட்டேன், "ராய், என்னுடைய

குறிப்பிட்ட சில பாவங்களை நா திரும்ப திரும்ப அறிக்கை செய்துட்டு இருக்கேன். என்னுடைய முழங்கால்களில் நின்று கதறுகிறேன். என்னுடைய நாளையும் உணவையும் நா தவற விடுகிறேன். எங்கிட்ட என்ன தவறு இருக்குன்னு தெரியலையே? அதற்கு அவர், "ஓ, மகனே, ஜெயம் என்பது நீ பாவத்தை மேற்க்கொள்ளுவது கிடையாது, இயேசு உன்னை மேற்கொள்வதுதான் ஜெயமாக இருக்கிறது. நீ ஏன் பாவத்தை பார்த்துட்டு இருக்க, ஏன்னா அது உன்னை திரும்பவும் நியாயப்பிரமாணத்திற்கு கீழ தள்ளிடுமே? நீ ஏன் இரட்சகரை பார்த்து அவருடனான உனது நடையை அதிகரித்துக்கொள்ள கூடாது என்றார். அவருடைய வார்த்தை உன்னை சுத்திகரிக்கிறது. அது வாழ்வில் ஆஹா என்ற நிலையை சுண்டிவிடுவதாக இருந்தது. அதுவரைக்கும் நா அப்படி பார்த்ததே இல்லை. நா எப்பவுமே என்ன செய்ய கூடாது என்பதில தான் அதிக கருத்தா இருப்பேன், ஆனா என்னால என்ன செய்யமுடியுன்னு நினைச்சது இல்ல, கிறிஸ்துவுக்குள் என்னால என்ன செய்ய முடியும். சரி, ரோமர் 6:14ல், சொல்லியிருக்கிறார், "பாவம் உங்களை" இங்க அவர் பேசுகிற விதம் ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது, எந்த பாவமானாலும் சரி, "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டு இருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாதே." இப்ப, இங்கிருந்து தான் நாம் துவங்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

ஏன்னா ரோமர் ஐந்து கூறுகிறது நாம் கிருபையில் தான் இருக்கிறோம். அதுதான் நம் ஸ்தானம். ஆனால் கிருபைக்கு கீழ் வாழ்வதும் நியாயப்பிரமாணத்திற்கு கீழ் வாழ்வதும் என்னுடைய தெரிந்தெடுப்பாக இருக்கிறது. நியாயப்பிரமாணம் எனது செய்கையை பார்க்கிறது. நமது உலகத்தில் சிறப்பாக செயல்பட்டால் பரிசுகள் கிடைக்கும். தேவனிடம் அப்படியில்லை. அவர் என்னுடைய திறமைகளினால் ஈர்க்கப்படுவது இல்லை. நியாயப்பிரமாணத்திற்கு கீழ் என்னை நிலைபடுத்து அந்த நோடுயில், பலவிதமான சட்டதிட்டங்களுக்கு என்னை நான் கீழ்படுத்துகிறவனாக இருக்கிறேன். தியான நேரம் என்ற விதி: எனக்கு நினைவிருக்கிறது ஒரு முறை ஒரு புஸ்தகத்தை வாசித்தேன். அதுல நீங்க காலையில நாலு மணிக்கு எழுந்தா தேவன் உங்களை பயன்படுத்த முடியும் என்று இருந்தது. நான் உண்மையாக தேவனால் பயன்படுத்தப்பட விரும்பினேன். என்னால முடிந்த அளவிற்கு நான் உண்மையா இருந்தேன். நா காலையில  நாலு மணிக்கெல்லாம் எழுந்திடுவேன், முழங்கால் போட்டு நா இதுவரைக்கும் செய்யாத காரியங்களை செய்திருக்கேன். என்னோட கண்களை மூடிடுவேன். அப்பறம் ஏழு மணியடிக்க கால்மணிநேரம் இருக்கும்போது இதுவரைக்கும் அனுபவிக்காத மரத்துப்போன காலோட எழுந்திருப்பேன். இங்க ஏதோ சரியா இல்லைன்றது மட்டும் தெரிஞ்சுது, ஏன்னா என்னுடைய சொந்த பெலத்துல இதை தொடர்ந்து செய்யணுன்னு நினைச்சேன், என் சொந்த பெலம்.

மறுபடியும் சொல்றேன், தேவன் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறாரோ அதைஎல்லாத்தையும், செய்யும் சத்துவத்தையும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்குள் வந்து வாசம்பண்ணி அளித்திடுவார். அதனால தான் அவர் சொல்கிறார், நீங்க கிருபையின் கீழ் இருந்தால், நீங்க அப்படி இருக்க விரும்பினால், அர்ப்பணித்திடுங்கள். சரி, நியாயப்பிரமாணம் கிரியைகளை கேட்கிறது, கிருபை அர்ப்பணிப்பை கேட்க்கிறது. என்னை நான் அவருக்கு அர்ப்பணிக்க விரும்பினால், அவருக்கு விட்டுகொடுத்தால், அது வாழ்க்கை மாற்றம் அடைவது மட்டுமல்லாமல், வாழ்க்கை பரிமாற்றம் நடைபெறுவதாக இருக்கும். என்னுடையவைகள் எல்லாம் அவருடையவைகளாக மாறவேண்டும். அது என்னை முற்றிலும் மேற்கொள்ளும் நிலையாகும். எங்க அது என்னில் தாக்கத்தை உண்டாக்கவில்லை என்று என்னால் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. வேயினிடம் எல்லாமே இல்லை, நா யாராக இல்லை என்று எனக்கு தெரியாது, இன்னும் எனக்கு தெரியாத பல காரியங்கள் இருக்கிறது, அது எனக்கு தெரியாதுன்றதுல எனக்கு சந்தோஷம் தான். நா எதுவாக இல்லாமல் இருக்கிறேனோ, நா அவருக்கு என் வாழ்வை அர்ப்பணித்தால் அவர் அது எல்லாமுமாய் ஆகிடுவார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நமக்குள்ளாக இருந்து ஓடும் நதியாகும். இயேசுவை நம் வாழ்வில் இஎசுவாகவே இருக்க அனுமதிப்பதாக இருக்கிறது. சரி…

**ஆன்கர்பெர்க்:** கிருபை என்பதை குறித்து நாம் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். பலவிதமான பிரமாணங்கள் இருக்கிறது வேதாகம கோட்பாடுகள் இருக்கிறது கிறிஸ்தவர்கள் தேவனை பிரியப்படுத்த அமைத்த கோட்பாடுகள் இருக்கிறது. இதை நான் செய்தால், இவ்வளவு நேரம் அதிகமா நா ஜெபம் பண்ணினால், தேவனை நான் ஈர்த்திட்டால், தேவன் எனக்கு நல்லவராக இருந்திடுவார். நா பணம் கொடுத்தால், அவர், தேவன் என்னை கனப்படுத்துவார். இந்த பிரமாணங்களை தவிர்த்து  கிருபை என்றால் என்ன  என்பதை பற்றி சொல்லுங்கள்.

**பார்பர்:** என்னை, பொறுத்தவரை கிருபை என்பது சத்துவமளிக்கும், மருரூபமாக்கும் நமக்குள் வசிக்கும் கிறிஸ்துவின் வல்லமையாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** நாமும் அதை ஏற்கனவே ஏற்றுகொண்டிருக்கிறோம்.

**பார்பர்:** ஏற்கனவே ஏற்றுகொண்டிருக்கிறோம். நம்முடைய எல்லா பாவங்களும் பண்ணிக்கப்பட்டிருக்கிறது. ஏன்? அதாவது, நாம் எதற்காக பாவங்களை அறிக்கை செய்கிறோம்? ஏற்கனவே மன்னிப்பு நமக்கு உரியதாக இருக்கிறது என்பது விளங்குகிறது. மேலும் அவருடனான நமது நடையில் நம்மை சுத்திகரிப்பதாக இருக்கிறது. ஒழுங்கின்மையை தூயமையாக்கிட. தேவன் நம் வாழ்வில் புதுப்பிக்கப்பட வேண்டும். அதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானது.

நீங்க மன்னிப்பை பெற்றுகொள்வது என்பதாக அல்ல, ஏற்கனவே உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. என்னை பொருத்தவரைக்கும் இப்படி சொல்ல கற்றுகொல்வதுதான் முக்கியம், "தேவனே, என்னால முடியாது, என்னால முடியுன்னு நீங்க சொல்லலா, ஆனா உங்களால முடியும், நீங்க எனக்குள்ளிருந்து செய்வேன்னு சொல்லியிருக்கீங்க."

**ஆன்கர்பெர்க்:** சரி, ஆல்ரைட், இப்ப வசனத்திற்கு நேராக போகலாமா.

**பார்பர்:** ரோமர் ஏழின் முதல் பகுதி அதாவது, நாம எப்படி மரித்தோம் எப்படி மரணம் உண்டானது எப்படி இப்போது கிருபையின் கீழ் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை பற்றி கூறுகிறார். ஆனா நா பதினான்காம் வசனத்தை பார்க்க விரும்புகிறேன், ஏன்னா இந்த வசனத்தில் இருந்து இருபத்தி ஐந்தாம் வசனம் வரைக்கும் மாற்றுகருத்துகள் இருக்கிறது. பவுல் இரட்சிக்கபட்டிருக்கிறாரா? பவுல் கைவிடப்பட்டவரா? சரி, முதல்ல, இந்த கேள்வியே தப்பான கேள்வி. இதுல எனக்கு மறுப்பு சொல்லுகிற சில நண்பர்கள் இருக்காங்க. இது தவறான கேள்வி. இது பிரமாணத்தை பற்றி சொல்கிறது. அவர் இரட்சிக்கப்பட்டாரா இல்லையா என்பது பிரச்சனை இல்லை. அவர் இரட்சிக்கப்படலைன்னா அவரை குற்றப்படுத்திடும். அவர் இரட்சிக்கப்பட்டிருந்தால் அது அவரை குன்றிட செய்யும், அந்த பகுதியை பற்றி தான் பதினான்காம் வசனத்தை வைத்து சொல்ல

நினைக்கிறேன். ஆனா அவர் எப்படி சொல்லி துவங்குகிரான்னு பாருங்க, “பிரமாணம் ஆவிக்குரியது என்று நமக்கு தெரியும். நியாயப்பிரமாணத்தில் எந்த தவறும் இல்லை. “ஆனால் நான் மாம்சத்தில் இருக்கிறேன், பாவ கட்டுகளுக்கு தள்ளப்பட்டிருக்கிறேன்.” என்னை பொறுத்தவரை மாம்சம் இன்னும் கிரியை செய்துகொண்டிருக்கிறது என்பதை தான் குறிக்கிறது. எனக்கு புதிய இருதயம் பெறப்பட்டிருந்தாலும்,இன்னும் என் மாம்சத்தோடு நான் போராடவேண்டி இருக்கிறது, இது முற்றிலும் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறது, ஒவ்வொரு பாகமும் பாவத்திற்கு அடிமைப்பட்டு இருக்கிறது.

ஒரு வாலிபன் ஒருநாள் என்னை நோக்கி நடந்து வந்தான், அவனும், அவனோட அப்பாவும் வந்தாங்க அவன் கூட அவரும் இருந்தார், நா இருந்த சபையில் என்னிடம் வந்தார்கள். அவன் என்னிடம், “உங்ககிட்ட வந்த நாங்க பேசனுன்னு நினைத்துகொண்டிருந்தோம், என்றனர்.” அதற்கு நா அப்படியா? ன்னு கேட்டு, “எதற்காக என்றேன். அவங்க பயனுக்கு அப்பா முகமே இல்லை. அவன் தன்னோட தலையை தொங்க போட்டுகொண்டு நின்றுகொண்டிருந்தான். அவர் என்னிடம் சொன்னார், “நா, என்னோட பையன் இன்டர்நெட்ல தவறான விஷயங்களை பார்த்துட்டு இருக்கிறதை பார்த்தேன், நீங்க அவனிடம் பேசும்படியாக கூட்டிட்டு வந்திருக்கேன்னு சொன்னார். அந்த ஹால்ல அங்குமிங்கும் இருந்த ஜனங்கள் இதையெல்லாம் கேட்டுட்டு தான்

இருந்தாங்க, அது அந்த பையனுக்கு செத்திடனும் போன்ற உணர்வை உண்டாக்கியிருக்கும். என்னுடைய கரத்தை அவன் நெஞ்சுல வைத்தேன். அதுவரைக்கும் நா அப்படி செய்தது கிடையாது. அவனை என்னுடைய பாதையில் இருந்து அப்புரப்புடுத்தி நான் அவனிடம், "நா உங்கிட்ட பேச விரும்பல, ஆனா உங்ககிட்ட பேச விரும்புகிறேன் என்றேன்." அவனை என்னுடைய பக்கத்தில் இழுத்து அவன் தோலின் மேல் என் கரத்தை போட்டு அனைத்து கொண்டு அவனிடம், சாதாரண கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்திற்கு உன்னை வரவேற்கிறேன் என்றேன். உன்னோடு உட்கார்ந்து இயேசு உன்னை மேற்கொண்டு செயல்படுவது தான் உண்மையான வெற்றி என்பதை உனக்கு புரியவைக்க விரும்புகிறேன் என்றேன். ஏன்னா மாம்சம் பாவத்திற்கு அடிமைபட்டிருக்கிறது என்று அவனுக்கு தெரியும்.

**ஆன்கர்பெர்க்:** இது பயங்கரமான சம்பவம்

**பார்பர்:** சரி, வசனம் 15, "எப்படியெனில் நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன்." இது எப்ப நடக்கும்? நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முயலும்போது, முற்றிலும் மாறுபட்ட ஒன்றை தான் செய்கிறேன். அவர் முதலில் இப்படியாக சொல்கிறார், "இச்சை பாவம் என்று நான் அறியாமல் இருந்தேன்."அப்பறம் என்ன செய்கிறார்? தேவன் அதை

சொல்லாதவரையில் தனக்கு இச்சையான எண்ணம் வந்தே இல்லை என்று சொல்லுகிறார். அதற்கு பிறகு எப்போது, இச்சை, இச்சை, இச்சை, இச்சை, இச்சை, இச்சையாயிருந்தது. திடீரென்று இது சரியில்லை என்பதை அவர் உணருகிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, உங்க புத்தகத்தில் சொல்லியிருந்தது எனக்கு பிடித்திருந்தது, தெரியுமா. உங்களுக்கு பவுலுக்கும் பொதுவான ஒரு கருத்து இருக்கிறது.

**பார்பர்:** ஆமா, ரொம்ப நாளா, அதை பார்த்திருக்கிறேன். இந்த விஷயத்தில் அவர் உண்மையா இருந்ததை பாராட்டுகிறேன். ஆனா என்னை பொறுத்தவரை அவர் சொல்லும்போது, "எனக்கு புரியாத எனக்கு சம்மதமில்லாத காரியங்களை நான் செய்கிறேன் என்று சொல்லுகிறார்,"

**ஆன்கர்பெர்க்:** அதோட, இன்னொரு விஷயத்தை புரிந்துகொள்ளவேண்டும் என நினைக்கிறேன், இதை சொல்கிறவர் அப்போஸ்தலனாகிய பவுல். இவருடைய நிருபங்களைதான் நாம் அதிகமாக பார்க்கிறோம். இந்த நபருடைய பேச்சைத்தான் சபைகளில் இருந்தவர்கள் ஆச்சரியத்தோடும் வியப்போடும் கேட்டார்கள் என்று பார்க்கிறோம், சரியா. நம்மை போல அவரும் போராடிக்கொண்டிருந்த விஷயத்தில் அவர் ஒரு தெளிவான தீர்வை பெற்றுகொண்டத்தை பார்க்கிறோம். தொடர்ந்து சொல்லுங்க.

**பார்பர்:** இதுல, நா  பல விஷயங்களை யோசித்து பார்க்கிறேன். கொலோராடோ ல ஸ்கையிங் பண்ண போயிருந்தோம், ஸ்பிரிங் ஸ்கையிங், அதாவது நான் தென்கிழக்கு பகுதியில் இருந்து வர்றோம் எங்களுக்கு ஸ்பிரிங் ஸ்கையிங் பத்தி எதுவுமே தெரியாது, அது காலையில் இருபது டிகிரீ  இருந்துச்சு, மத்தியானத்துல 70. அதனால அதுகேதத்த மாதிரி டிரெஸ் பண்ணியிருந்தோம். நீண்ட காலுறைகள், சுவெட்டர்கள் என, கனமான உடை அணிந்திருந்தோம். என்னோட பசங்களையும் நல்லா கனமான உடையணிந்து கூட்டிட்டு போனேன். அவங்க ஸ்கைஸ் அப்பறம் பூட்ஸ் எல்லாம் போட்டிருந்தாங்க, எனக்கு ஒன்னுமே புரியல, நா இப்படி செய்திருக்க கூடாதோ என்பது போன்ற உணர்வு எனக்கு உண்டானது.

லிப்ட் இருக்கிற இடத்திற்கு போக நாங்க கோண்டோலால ஏறினோம். நாங்க அங்க போனாலும் எனக்கு அசவுகரியமா இருந்துச்சு, வேர்த்து ஊத்துது, சூடாயிருச்சு. நிறைய உடைகள் என்மேல இருக்குது. என்னால முடியல, நான் சொன்னே, “ஸ்டீவன், உன்னோட ஸ்கைச போட்டுக்கோ” அவனும் போட்டுகிட்டான். மேலும் நா, அசையாம, இருன்னு சொன்னேன்.” அவனுக்கு ஆடிட்டே இருக்கிற பழக்கம் இருக்குது அதற்கு பிறகு அவனை நான் பார்க்கவே இல்லை. நா சொன்னே, அப்படியே அங்கயே நில்லு.” மேலும் நான், “சரி, ஸ்டேப்னி, நீ ஊ ஸ்கைஸ்ச போடு.

அவளோட முதல் ஸ்கைஸ்ச சரியா அழகா போட்டுட்டா.

இரண்டாவதை முயற்சி பண்ணினா ஆனா, அது அவளுக்கு சரியா வரல. நா அவட்ட சொன்னே, “ஸ்டேப்னி, எனக்கு கோபம் வருது, இப்ப நீ உன்னோட ஸ்கைஸ்ச போடு என்றேன். அதற்கு அவ, நா அதை போதாதா முயற்சிக்கிறேன். ஆனா சரியா வரலன்னு சொன்னா. இறுதியா, நா சொன்னேன், “ஸ்டேப்ணீ” அப்படின்ற வார்த்தை மட்டும் தான் ஏ வாயிலிருந்து வந்துச்சு.

இப்ப, நா Dr. சாட்டியட்ஸ் கூட ரேடியோல பேசினேன், என்னோட வாழ்க்கையில் பலவிதமான சம்பவங்கள் நடந்திருக்கிறது, பலவிஷயங்களை ஊழியத்தில் கற்றுகொடுத்திருக்கிறேன். இப்ப திடீருன்னு, இந்த வார்த்தையின் தொனி எங்கிருந்து வந்துச்சு? எனக்கு தெரியலாம், என்னோட சத்தத்தை 50 தூரம் வரையில் இருந்த எல்லாரும் கேட்டிருக்காங்க. என்னோட மகளும் கத்தினா அப்பா! நாங்க மறுபடியும் லிப்டுக்கு போய் அங்கிருந்து கீழவந்து ஒரு கடைகிட்ட பார்த்தோம், அவள எங்களால பார்க்க முடியல. நாங்க ஒருவரை ஒருவரை திகைப்போடு பார்த்தோம். நா ஜன்னலுக்கு வெளியிலையே பார்த்துட்டு இருந்தேன். அங்க நாங்க இறங்கியதும், அவர் சொன்னார், “நீங்க செய்யவேண்டிய ஒரே வேலை இத மட்டும் கொஞ்சம் பின்னால தள்ளுங்க என்றார், “அது எனக்கு தெரியுமே என்று நினைத்தேன், எவ்வளவு முட்டாள் தனமா இருந்திருக்கேன்னு நினைச்சேன். மறுபடியும் நாங்க மேல போக நினைத்தோம். இறுதியா, நா அவல பார்த்து அவகிட்ட சொன்னே, “ஸ்டேப்னி, நீ கேட்ட அந்த சத்தம்

அப்பாவோட சுயத்தில் இருந்து வெளிப்பட்ட சத்தமாக இருந்தது, இயேசு கிறிஸ்துவின் பெலப்படுத்தும் வல்லமையை மீறி வெளிப்பட்ட சத்தம் அது என்றேன். நீ என்னை மன்னிக்கனுன்னு கேட்டேன், ஏன்னா, இந்த மாதிரிதான், குடும்ப காரியங்களில் நான் செயல்படுகிறேன் என்றேன். அதற்கு ஸ்டெப்னி சொன்னா, அப்பா, நீங்க இத சொன்னதுல சந்தோஷப்படறேன், ஏன்னா நானும் இதை தான் சொல்லனுன்னு நினைச்சேன் என்றால்.

**ஆன்கர்பெர்க்:** இந்த உதாரணத்தை தொடர்ந்து பார்க்கலாம். நேயர்களே இன்னும் பல விஷயங்கள் காத்திருக்கிறது. இப்போதும் ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம், ஆனால் மீண்டும் தொடர்ந்திடலாம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நான் Dr. வேயின் பார்பரோடு பேசிக்கொண்டு இருக்கிறேன் அவர் என்ன சொல்கிறார் என்றால் நான் ஒரு கிறிஸ்தவனாக இருந்தும் , ஏன் நா அதிக பாவம் செய்கிறேன், பாவம் செய்வதை தடுப்பது எப்படி? இதில் இரகசியம் என்ன, ஏன்னா மறுபடியும் எதையோ நா இழந்து நிற்கிறேனோ? ஆல்ரைட், அப்போஸ்தலர் பவுல் என்ன சொன்னார் என்பதை பற்றி எங்களுக்கு சொல்லீட்டு இருக்கீங்க, இப்ப எதுல இருக்கோன்றதை சுருக்கமா சொல்லி  அடுத்ததை தொடர்ந்து பார்க்கலாமா.

**பார்பர்:** சரி, அதுதான் ரோமர் 7. மேலும் ரோமர் 6, 7, மற்றும் எட்டு: ரோமர் 6, அதாவது, நம்முடைய வாழ்வில் என்ன நடந்தது நாம் கிருபைக்கு கீழ் எப்படி வாழ முடியும் நடக்க முடியும் என்பதை பற்றி அதில் சொல்லுகிறார். ரோமர் 7, இது வந்து, நியாயப்பிரமாணத்தை பற்றிய செயல்பாட்டு திறமைகளை நம்பி நான் என்னை அதற்கு கீழ் நிறுத்தினால் என்ன நடக்கும் என்பதை பற்றி கூறுகிறது. இப்ப, ஒரு கிறிஸ்தவனாக என்னால் அதை செய்ய முடியும், ஆனா இரட்சிக்கப்படாத நா அதற்கு கீழ்தா இருந்தேன். அதில் அவர் ஒரு காட்சியை காட்டுகிறார். அது எதுவாக இருந்தாலும் சரி, சிலுவையின் இரண்டு பக்கத்திலும் நியாயப்பிரமாணம் ஒரே மாதிரிதான் இருக்கிறது, அதேபோல்தான் மாம்சமும். சிலுவைக்கு முன்னும் சிலுவைக்கு பின்னும் அது கேடுள்ளதாகதான் இருக்கிறது. சிலுவைக்கு பின் இருக்கும் வித்தியாசம் என்னன்னா, நான் அதற்கு என்னை விட்டுகொடுக்க அவசியமில்லை. அதை நான் செய்யவேண்டிய கட்டாயம் இல்லை. எனக்கு தெரிந்துகொள்ளும் சுதந்திரம் அதிகரிக்கிறது.

அவர் சொல்கிறார் - பவுலை எனக்கு பிடிக்கும். அவரை எனக்கு ரொம்ப பிடிக்கும். அதாவது, ஹே, இவருக்கு என்னை தெரியும் - என்று சொல்கிறார், “நான் விரும்பாதை நான் செய்யும்போது, நியாயப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு, அது நல்லது என்று அறிக்கையிடுவது போலிருக்கும்.” தேவன் நம்முடைய வாழ்வில்

எதிர்ப்பார்க்கும் எந்த விஷயத்திலும் தவறு என்று ஒன்றிருக்காது. அவரிடத்தில் எந்த பிரச்சனையும் கிடையாது, நம்மகிட்டதா பிரச்சனை. நம்மால எதையும் செய்து முடிக்க முடியாது. அதனால தா அவர் சொல்கிறார், "நான் செய்வதை நானாக செய்யவில்லை பாவம் என்னை அடிமையாக்குகிறது." மறுபடியும் பாவத்தோடு விளக்கமளிக்கும் வார்த்தைகளை சொல்லுகிறார். பழையநியாயமற்ற காரியங்கள் அனைத்தும் , அது நமக்குளே இருப்பது போல இருக்கிறது, "என்னில் வாசமாக இருக்கிறது. அதற்கு பிறகு பதினெட்டாம் வசனத்தில் அவர் சொல்லுகிறார். "நன்மை ஒன்றும் என்னில் இல்லை. ஒருவர் இப்படியாக சொன்னார், இதை பாருங்க, அவன் பின்மாற்றம் அடைந்தான். சரி, ஒரு நிமிஷம் பொறுங்க, "அதாவது, மாம்சத்தை சொல்லுகிறார்." சிலுவைக்கும் முன்னும் பின்னும் என் மாம்சத்தில் எந்த நன்மையையும் இல்லை என்கிறார். மேலும் அவர் சொல்கிறார், "எனக்குள் விருப்பம் இருக்கிறது, ஆனா நன்மை செய்யும் ஆற்றல் என்னிடம் இல்லை." அதை தான் அவர் மறுபடியும் தன்னை குறித்து சொல்லிக்கொண்டே இருக்கிறார்.

ஒரு உதாரணத்தை குறித்து யோசித்து கொண்டு இருந்தேன். நா நியூ மெக்சிகோல இருந்தப்ப வாழ்க்கையில் முதல் முறையா வேட்டையாட போவதற்கு அழைக்கப்பட்டேன். அது ஒரு மான் வேட்டை, வாழ்க்கையில் முதல் முறையாக இப்பதா. அது ஒரு ராணுவ களமாக இருந்தது, விட் சான்ஸ் மிசில்லி ரேஞ். நா அந்த,

இடத்துல இருந்தேன். என்னோட இரண்டு பெற கூட்டீட்டு போனே அவங்களுக்கு மானை வேட்டையாடுவதை பத்தி என்னை விட அதிகமா தெரியும், எல்லாரும் சேர்ந்து போனோம்.

கதைய சுருக்கமா சொல்லீடுறேன், முதல் நாள் வேட்டையாடினோம், நா சாகப்போரேன்னு நா நினைச்சேன். மேற்கு பக்கம் எவ்வளவு தூரன்றத கணக்கிட முடியல. இரண்டு மைகள்ன்னு நினைச்சு போவீங்க, அது, இருபதா இருக்கும். அதனால நாங்க நடந்து நடந்து நடந்து நடந்து போயிட்டே இருந்தோம். ஒருமுறை துப்பாக்கி சூடு நடத்தினேன், அது ரொம்ப தூரமா இருந்துச்சு, எவ்வளவு பக்கத்துல இருகோன்றத தெரிசுக்க முயற்சி பண்ணே, ஆனா எங்களால பக்கத்துல இன்னும் வரமுடியல. அவர் மேல பார்த்து அது என்னன்னு ஆச்சரியமா பார்த்தார். அடுத்த நாள் நாங்க கிளம்பினோம் இன்னைக்கு பயங்கர அசதியா இருந்துச்சு. ரொம்ப அசதியாக இருந்தோம், அதனால திரும்ப வீட்டிற்கு போயிட்டோம். நாங்க திரும்ப வீட்டுக்கு போறோம். நாங்க விளையாட்டு ஸ்தலத்திற்குள் ஓடி சென்றோம். அவர் சொன்னார், நண்பர்களே, வீட்டுக்கு போக நேரம் வரல. துப்பாக்கி சூடும் நேரம் இன்னும் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் பாக்கி இருக்கிறது என்றார். ஹைவே பக்கமா போங்க, அது பன்னிரண்டுன்னு நினைக்கிறேன்.” ஓகே, ராணுவ களத்தின் 12வது ஹைவே மற்ற ஹைவே 12 டை விட இது சற்று வித்தியாசமானது. நாங்க அப்படியே அந்த சாலையில் போயிட்டு இருந்தோம் திடீரென்று - நா அறை தூக்கத்தில் இருந்தேன்,

இன்னொரு நபர் என்னோட டிரக்க ஓட்டீட்டு வந்தார் - அவர் அப்படியே பிரேக்க போட்டு இதோ இங்க இருக்கு இதோ இங்க இருக்குன்னு சொன்னார். நா கேட்டேன், என்னது? அதற்கு அவர் சொன்னார், “ஆரிக்ஸ் இருக்குது”

அதெல்லாம் அருமையான பெரிய விலங்குகள், அதுமட்டுமில்லை, எதை பத்தியும் அதெல்லாம் கவலைபடாது. ஆப்ரிக்க சிங்கங்களின் ஒரே உணவு இதுதான், அதனால இங்க அது எந்த பயமும் இல்லாமல் திரித்து. இப்ப நா சாலையை கடந்து போக ஆரம்பிச்சேன், ஏன்னா சாலைக்கு இந்த பக்கத்தில் இருந்து சுடுவதற்கு உங்களுக்கு அனுமதி கிடையாது. கார்ல இருந்த நபர் சொன்னார், “அவன சுட்டுட்டு, அவனை சூடு! நா சொன்னே, “நான் ரோட்டின் தவறான பக்கத்தில் நிற்கிறேன். அதற்கு அவங்க, யாரும் வர்லனாங்க. அதனால நா சாய்ந்து நின்று, அதை வீழ்த்தினேன்.

இது,அருமையாக இருந்தது; இது கதையின் மீட்ப்பு பகுதியாக இருக்கிறது, அருமையான குறியாக இருந்தது. சரி, அதை நாங்கள் வெளியில் கொண்டுவந்தோம். அது எங்களை கொன்று விடுவது போல இருந்தது. போனவங்கள்ள நா தா சிறுவனாக இருந்தேன். அதை எங்கள் வண்டியில் எங்களால் ஏற்ற முடியல. ரொம்ப கனமாக இருந்தது, அதை ஒருவழியாக நாங்க சரி செய்துட்டோம். இப்ப களத்தின் மேற்பார்வையாளர் வந்தார், அவங்க எங்ககிட்ட, நீங்க மானை வேட்டையாடிநீங்களா என்றார், அதற்கு நான், ஆமா நிச்சயமா

என்றேன். எங்கிருந்து அதை சுட்டீங்கன்னு கேட்டார். அங்கிருந்து தான் என்றேன். இரண்டாவது முறையா, “எங்கிருந்து சுட்டீங்கன்னு கேட்டார், அங்கிருந்தான் என்றேன். இப்ப எனக்கு அவர் கேட்டது புரிஞ்சிருக்கனும். மறுபடியும் மூன்றாவது தடவை கேட்டார், “எங்கிருந்து அதை சுட்டீங்க.” அதற்கு நான், அங்கிருந்து தான் என்று சொன்னேன்.” அவர் தன்னுடைய மைக்கை எடுத்து பேசினார், :இங்கு சில பிஷ் கமிஷன் ஆபீசர்கள் உடனடியாக தேவைபடுகிறார்கள். சட்டவிரோதமாக ஒரு மான் வேட்டையாட பட்டிருக்கிறது என்றார்.

நா யோசிக்க துவங்கினேன், என்ன சொல்றாரு? அவர் கேட்டார், இது விதிகளுக்கு விளக்கப்பட்டது என்று தெரியாதா? உங்ககிட்ட மேப் இல்லையா என்றார்.” அதற்கு நான், “நாங்க இரண்டு நாட்களா வேட்டையாடுகிறோம், ரொம்ப சோர்ந்து போயிருக்கோம், ஆனா கேம் வார்டந்தான் இந்த பக்கமா எங்களை போகும்படி சொன்னார் என்றேன். நடந்தத, சுருக்கமா சொல்லீடுறேன், எங்ககிட்ட சொன்ன நபர் அங்கு வந்தார். அவர் எங்கிட்ட நேரா வந்து என்னிடம் கேட்டார், சுட்டது யாரு என்றார். அதற்கு நான் அவரிடம் சொன்னே, நா தான். அதற்கு அவர், எங்கிட்ட சொல்றது ஏதாவது இருக்குதான்னு கேட்டார். அதற்கு நான், “உங்ககிட்ட சொல்றது நிறைய விஷயங்கள் இருக்குது என்றேன். அதற்கு அவர், சரி, இதெல்லாம் எப்படி நடந்ததுன்னு சொல்லு என்றார்.” அதற்கு நான், நா டிரக்க விட்டு வெளியில் வந்தேன், அது என்னுடைய கண்ணில் பட்டது, நா சாலையை கடந்து அதை சுட்டேன்,

அதோடு அனுமதி இல்லாத பகுதியில் சுட்டேன் என்றேன், எனக்கு அது தெரியாது என்றேன். உடனடியா என்னோட மாம்சம் சொன்னது, அவனுக்கு தெரியாது என்றால் அதற்கு அவனுக்கு தண்டனை கிடைக்காது. அதனால அவரிடம் நா டிரக்கை விட்டு வெளியில் வந்தேன் ரோட்டை கடந்து போனேன் அதை சுட்டேன் என்றேன். அது நாய் போல கிடந்தது.

சரி, சுருக்கமா சொல்றேன், அவர் என்னை திரும்ப களத்திற்கு கொண்டு போனார். அங்கிருந்த கேம் வார்டன்கள் எல்லாரும் நா ஏதோ ஜனாதிபதியையோ அல்லது வேறு யாரையோ சுட்டது போல பார்த்தார்கள். ஆமா, அதாவது, அது எப்படி இருந்துதுன்னா, இவன் ஏன் இப்படி செய்தான், என்பதுபோல. மூன்று நாள் ஆயிடுச்சு. என்ன செய்யலாம் என்று இதுவரைக்கு யாரும் எங்கிட்ட எதையுமே சொல்லல. அது ரொம்ப அசவுகரியமாக தெரிந்தது. ஸ்டாப் ரெட்ரீட்கு போனேன், அதை பற்றி கவலை பட அவசியமில்லை. வியாழக்கிழமை என்னோட மனைவி அவங்க அம்மாக்கு உதவும்படியாக போயிட்டாங்க. வெளிக்கிழமை காலை சுமார் நாலு மணி, தேவன் என்னை எழுப்பினார், நண்பனே, அப்பதா என்னோட மாம்சம் எப்படிப்பட்டதென்று உணர்ந்தேன், அது மிகவும் கேடுள்ளதாக இருக்கிறது. நான் என்ன பாவம் செய்திருக்கிறேன் என்பதை அப்போதுதான் பார்க்க ஆரம்பித்தேன். அதை நான் சரிசெய்திட

வேண்டும். தேவனே சொன்னது போல இருந்தது, “அந்த நபரை கூப்பிடு.”

அதனால அவரை கூப்பிட்டேன் நா கூப்பிடறதுக்குள்ள, அவர் அங்கிருந்து போயிட்டார், ஒருநாள் முழுதும் இருக்க வைத்தார். அவர் வெளியில் சென்றுவிட்டார். அடுத்த நாள் அவர் என்னை அழைத்திருந்தார். சரி, அதற்குள்ளாக, நானே அதிலிருந்து வெளிவர முயலவேண்டியிருன்தது. அவரிடம் நா சொல்லவேண்டிய அவசியமில்லை, அது எனக்கு ஏற்பட்ட ஒரு சோதனை. அவர் என்னை அழைத்ததும் நா சொன்னேன், “என்னோட பயின் எவ்வளவுன்னு தெரிஞ்சுக்க எந்த நம்பரை அழைக்க வேண்டும் என்று எனக்கு சொல்லுங்க என்றேன்.” அதற்கு அவர் கேட்டார், அவ்வளவு தானா? அதற்கு நான், அவ்வளவுதான் என்றேன். இல்ல, பரிசுத்த ஆவியானவர் எனக்கு அதிக அழுத்தத்தை கொடுத்தார். அதனால அவரை நா திரும்பவும் கூப்பிட்டேன். நா அவரை திரும்பவும் அழைத்தபோது இருபது நிமிடம் காக்க வைத்தாங்க. இறுதியா அவர் வந்து சொன்னார், “வேயின், நாம இப்பதான பேசினோம் என்றார்.” நா சொன்னே, “ஆமா, பேசினோம். ஆனா நா யாருன்றத நீங்க புரிஞ்சுக்கணும், நான் ஒரு விசுவாசி என்னுடைய மாம்சம் என் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் திருப்பதியாக இருக்கவேண்டும் என்கிறது. உங்ககிடா ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு நாயை போல நான் பொய் சொன்னேன். நா அந்தபக்கம் போய்

சுட்டேன். அப்ப, நா கார்ல இருந்தவாரோ ரோட்ல நின்னோ அதை சுடவில்லை ஏனென், ஆனா ரோட்டிற்கு அந்த பக்கம் இருந்து சுட்டேன். அதை தவிர நா உங்ககிட்ட சொன்ன எல்லாம் உண்மைதான் என்பதை தெரியப்படுத்துகிறேன் என்றேன். அதற்கு அவர் சொன்னார், “வேயின்” என்றது சிரித்தார். இது நல்லதா கெட்டதா? அவர் இறுதியாக சொன்னார், “வேயின், நீ ரோட்டை கடந்துதான் சுட்டேன்னு தெரியும். அதற்கு நான், உங்களுக்கு எப்படி தெரியும் என்றேன். அதக்று அவர், “அதன் பெட்டி ரோட்டின் நடுவில் தான் இருந்தது என்றார். நா யோசித்தேன், ஓ, ச்ச, அதை நான் மறந்தே போயிட்டேனே.

ஆனா இதுல ஆச்சரியாமானது என்னன்னா நம்ம மாம்சம் எவ்வளவு சீக்கிரமா செயல்படுத்து. விசுவாசிகளாக நாம அதை பற்றிதான் யோசிக்க வேண்டும் அது மதம் சார்ந்த கேம்பாக இருந்தாலும் சரி அல்லது முரட்டாட்டமான நிலையானாலும் சரி. அது மதம் சார்ந்ததாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லாம் முரட்டாட்டமுடையதா இருக்கும். பாவத்தின் வேர் அவிசுவாசம் தான், அதுதான். நம்பிக்கை பிறந்துவிட்டால் துவங்கிவிட்டால், அந்த நம்பிக்கை தான் நம்மை முற்றிலுமாக நடத்தி செல்வதாக இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இதற்கான பதிலை வசனத்தில் இருந்து எடுத்து காட்டுங்கள், ஏன்னா, இதை, இப்போது கேட்டுகொண்டிருக்கிற நீங்களும், நாங்களும் ஒரே பிரச்சனையை தான் எதிர்கொண்டு

வருகிறோம் சில நேரங்களில் ஒன்று தெரியாதவர்களை போல நீங்களும் நானும் நடந்திருக்கிறோம், அதை மறுக்கவே முடியாது, அதற்கு பிறகு பரிசுத்த ஆவியானவர் உங்களை உணர்த்த துவங்கினார், அப்ப நீங்க உங்க தவறுகளை அறிக்கை செய்ய வேண்டியிருந்தது. ஆனா இந்த காரியத்தை எப்படி மேற்கொள்ள முடியும், அது திரும்ப எழும்பும்போது, நடக்கிறது நடக்கட்டும் என்று சொல்வீங்க, பாவத்தோட ஒத்துபோக முடியுமா? கிறிஸ்து நமக்கு இங்க என்ன சொல்லுகிறார்?

**பார்பர்:** பவுல் என்ன சொல்கிறார் என்று உங்களுக்கே தெரியும் “ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவபிரமாணத்திற்கு என்னை சிறையாக்கி கொள்ளுகிறது.” மேலும் அவர் சொல்லுகிறார், நிர்பந்தமான மனுஷம் நான்! நிர்பந்தம் என்ற வார்த்தை என்ன பிரச்சனை என்று ஒருவருக்கும் தெரியாத  நிலையில் இருப்பது. அதை தான் சொல்கிறார். அதாவது அவர், “நிர்பந்தமான மனுஷன் நான்! யார், எப்படி, இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் என்கிறார். வசனம் 25 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கும், மாம்சத்தினாலேயோ பாவ பிரமானத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.:

எவ்வளவு நல்லதாக இருக்கனுன்னு நினைச்சு முயல்கிறோம் என்பது பொருட்டல்ல.

மேலும் அவர் எட்டாம் அதிகாரம் முதல் வசனத்தில் சொல்லுகிறார், “ஆனபடியால்” எனக்கு ரொம்ப பிடித்த வார்த்தை, “கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாய் இருப்பவர்களுக்கு எந்த ஆக்கினை தீர்ப்பும் இல்லை.” அவர் உங்கள் இரட்சிப்பை இழப்பதை பற்றி சொல்லவில்லை. அவர் ஷிப்டிங் கியரை பற்றியும் வாழ்வில் உண்டாகும் பரிமாற்றத்தை பற்றியும் சொல்கிறார். கிருபையின் பக்கமாக வந்திடுங்கள் உங்களால் முடியாததை உங்களுக்குள்ளும் உங்கள் மூலமாகவும் செய்வார் என்று நம்பிடுங்கள். தேவனே, இச்சையான உணர்வுகள் எனக்கு உண்டாகிறது, பேராசை உண்டாகிறது, எந்த விதமாக பாவாமாக இருந்தாலும் சரி. அவருக்கு முன்பாக ஒப்புவித்திடுங்கள். அவரிடம், ஆண்டவரே, உண்மையாக சொல்லுகிறேன், எப்படி என்று எனக்கு தெரியவில்லை, என்னால இதிலிருந்து வரமுடியல. அப்ப தேவன் சொல்வார், உன்னால முடியுன்னு நா சொல்லவே இல்லை. சரி, இப்ப என்னை கவனி, உன்னை நான் முற்றிலும் மாற்றுகிறேன், உன்னில் நான் செயல்பட வழிவிடு.” அந்த கட்டத்தில் தான் நாம் ஜெயத்தில் நடந்திட துவங்கிடுவோம். தேவன் நம்மீது ஏழு மாத தண்டனை காலத்தை விதிப்பது கிடையாது. எங்கிருந்து பிரிந்துபோனோமோ அதே இடத்தில் கிறிஸ்து மறுபடியும் நம்முடன் இணைகிற செயலாகும்.

**ஆன்கர்பெர்க்:** எனக்கு, பிடித்திற்குக்கிறது. உங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கையிடுங்கள். அவர் உங்களை மன்னித்திடுவார். அதாவது, ஹே, நீ அப்படிதான் என்று எனக்கு தெரியும் என்கிறார். இந்த மாதிரி பாவத்தில் போராடிக்கொண்டிருக்கும் சிலரை  தெரியும், மறுபடியும், அந்த பழைய நிலைக்கு போகாம தப்பிக்கணும் முன்நேரிடுங்கள், அது தவறு என்று உங்களுக்கு தெரியும், என்னால தூய்மையா வாழ முடியாதுன்னு நீங்க ஒருவேளை சொல்லலாம், நீங்க சொல்ற வழி அந்த மாதிரி இருக்கு, வேயின், தேவன் என்ன சொல்லுகிறார், அதை தேவனிடம் சொல்லுங்கள், “என்னை மாற்ற துவங்கிடும் என்றிடுங்கள்,” வேதத்தை வாசிக்க துவங்கிடுங்கள் தேவனிடம் சொல்லுங்கள், “தேவனே, என்னை மாற்றும்.” ஏன்னா இது, நீங்களா, உருவாக்குகிற ஒரு காரியம் கிடையாது. நம்மால முடியாது. நீங்க ஒருவேளை, “தேவனே, இந்த விருப்பங்களை நீர் உருவாக்கிட வேண்டும் என்றிடலாம், என் இருதயத்தில் இந்த உணர்வை தாரும்.” அது மட்டுமல்ல நீங்க, “தேவனே, நீர் விரும்புகிற காரியத்தை நான் செய்திட எனக்கு தயவாக உதவிடம் என்று கேட்கலாம். இந்த நேரத்தில் இருந்து எனக்குள்ளாக இருந்து நீர் வாழ துவங்கிடும்.” அந்த நிலைக்கு வந்த அடுத்த நொடியில், நீங்க சொல்லுங், “இயேசுவே, என்னால செய்ய முடியாது. இதோ மறுபடியும் வருகிறேன். என் மூலமாக நீர் வாழ்ந்திடும். வசனம் என்ன சொல்கிறது என்பதை நீங்கள்

அனுபவத்தின் மூலமாக கற்றுகொள்வீர்கள். அதனாலதான் நாம் பார்க்கிற இந்த தலைப்பை நான் அதிகம் நேசிக்கிறேன்.

ஆல்ரைட், அடுத்த வாரம், வேயின் என்ன பேச இருக்கிறார் என்றால், தேவனுக்கு அர்ப்பணித்திருக்க நம்மை ஊக்குவிக்கும் காரியம் என்ன. நாம் பேசிக்கொண்டிருக்கிற காரியங்களுக்கு ஏற்ற தேவனுடைய வாக்குத்தத்தங்கள் என்னவாக இருக்கிறது? வேயின் இதை இயேசுவுடன் ஒரு கொந்தளிப்பு என்று கூறுகிறார், சரியா, சந்தோசம் மற்றும் வல்லமையோடு வாழ்வது. வேதம் என்ன சொல்லுகிறது என்பதை விளக்கி சொல்லும் அருமையான சம்பவங்களை சொல்லும்படியாக இருக்கிறார், ஆகவே நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நினைக்கிறேன் தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை புரிந்துகொள்ளாமல் அவர் வைத்திற்கும் வாக்குத்தத்தங்களை கட்டும் அப்பியாசப்படுத்தாமல் அதை அனுபவிக்க முடியாது புரிந்துகொண்டால், அதுவே நம்மை ஊக்குவித்திடும் அதினால் நாம், :தேவனே, என் மூலமாக நீர் வாழ்ந்திடும் என்றிடுவோம்.” அடுத்த வாரம் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.